THE TAMIL NADU LEGISLATIVE COUNCIL

Saturday, the 28th November 1970.

The House met in the Council Chamber, Fort St. George, at four of the clock, the Deputy Chairman (THIRU G. KRISHNAMOORTHY) in the Chair.

I. QUESTIONS AND ANSWERS

STARRED QUESTIONS

Bug Poisons

*11. *Q.*—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Chief Minister be pleased to state :

(*a*) whether it is a fact that a Government order has been issued recently prohibiting Bug Poisons being sold in concentrated form ; and

(*b*) if so, whether there is any proposal to exempt bug poisons being sold in concentrated form which are far below in Toxic dose from the above Government Order ?

மூட்டைப் பூச்சி மருந்துகள்

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) செறிந்த வடிவில் விற்பனை செய்யப்பட்டு வருகிற மூட்டைப் பூச்சி நச்சு மருந்துகள் விற்பனைக்குத் தடை விதித்து அண்மையில் அரசு ஆணை பிறப்பித்துள்ளது உண்மையா ?

(இ) ஆமெனில், நச்சு அளவில் மிகவும் குறைவாகவுள்ள மூட்டைப் பூச்சி மருந்துகள் விற்பனை செய்யப்படுவதற்கு மேற்சொன்ன அரசு ஆணையினின்றும் விலக்கு அளிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, (அ) செறிந்த வடிவில் விற்பனை செய்யப்பட்டு வருகிற மூட்டைப் பூச்சி நச்சு மருந்துகள் விற்பனைக்குத் தடை விதித்து அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

(இ) அவ்வித செயற் குறிப்பு எதுவும் இல்லை.

[28th November 1970

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, மூட்டைப் பூச்சி மருந்து செறிந்த அளவில் இருந்தால், அது மனிதர்களின் உயிருக்குப் பாதகமாக இருந்தாலும் இல்லாவிட்டாலும், அதை விற்பனை செய்யக் கூடாது என்று அரசாங்கம் அறிவித்திருக்கிறார்கள். இந்த மூட்டைப் பூச்சி மருந்துகளில் கிட்டத்தட்ட 20 பாட்டில்கள் அல்லது 30 பாட்டில்கள் சாப்பிட்டால் கூட, மனிதர்களுக்கு எந்தவிதமான ஆபத்தும் ஏற்படுத்தாத மருந்துகளும் இருக்கின்றன. அதே சமயத்தில் ஒரு பாட்டில் சாப்பிட்டாலும், ஆபத்து ஏற்படுத்தும் மருந்துகளும் இருக்கின்றன. ஆனால் ஒரே சமயத்தில் எல்லா மருந்துகளையும், செறிந்த அளவில் இருக்கிற காரணத்தால், மனிதர்களுக்கு ஆபத்து இருந்தாலும் இல்லாவிட்டாலும், விற்பனை செய்யக் கூடாது என்று அரசு சொல்லியது நியாயமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : ஆரம்பத்தில் வணிகர்கள் தரப்பிலிருந்து இப்படிப்பட்ட மறுப்புகள் நிறைய வந்திருக்கின்றன. ஒருசில வணிகர்களுடைய லாப நோக்கத்திற்காக அடிக்கடி தற்கொலைக்கு மக்கள் ஆளாகிற நிகழ்ச்சிகளுக்கு மூட்டைப் பூச்சி மருந்து பயன்படுத்தப்படுகிற சூழ்நிலையிலிருந்து மக்களைத் தடுக்க வேண்டுமென்ற கொள்கையிலிருந்து பின்வாங்குவது நல்லதல்ல.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, இதைப் போன்ற ஒரு சட்டத்தை முன்பு குஜராத் மாநிலத்தில் போட்டுவிட்டு, அங்கே உள்ள வணிகர்கள் சொல்லிய பிறகு, அவர்கள் கூற்றில் நியாயம் இருக்கிறது என்பதைப் புரிந்துகொண்டு, இப்போது அதை மாற்றிவிட்டார்கள் என்பது இந்த அரசிற்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : நாமும் புரிந்துகொள்கின்ற நேரத்தில் மாற்றிவிடலாம்.

'B' Class Practitioners in Siddha

*12. *Q.*—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Education and Health be pleased to state :

(*a*) whether it is a fact that 'B' class Practitioners in Siddha are working on regular and contract basis in a number of Government Hospitals ;

(*b*) if so, the names of those institutions ; and

(*c*) whether there is any proposal with the Governm nt to employ B.I.M. graduates who are unemployed in these institutions ?

சித்த மருத்துவம்

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு கல்வி—சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :